FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 173 BNSS)
(பா.குபா.ச பிரிவு 173 இன் கீழ்)

~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(குந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

8083832

C

1. District மாவட்டம்: Virudhunagar PS காவல்நிலையம்: Vigilance and Anti Corruption Year ஆண்டு: 2026 FIR No. முத.அ. எண்: 06/2026 Date நாள்: 18.07.2026

2. (i) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: u/s 7, 8
(ii) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: u/s 106
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல்: 17.07.2026 Date to நாள் வரை:
Time Period : நேர அளவு — Time from நேரம் முதல்: 17.00 hrs Time to நேரம் வரை: 23.45 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 18.07.2026 Time நேரம்: 10.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: 18.07.2026 Time நேரம்: 10.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை தாலுகா அலுவலகம், சுமார் 50 கி.மீ தென் மேற்கு.
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: திரு.சி.லட்சம்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்: திரு.சின்ன இருளாண்டி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு: 07.03.1976
(d) Nationality : நாட்டினம்: Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில்: மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலர்/கவரி விருதுநகர் மாவட்டம்
(g) Address : தனி வட்டாட்சியர், குடிமை பொருள் வழங்கல், விருதுநகர் தாலுகா, விருதுநகர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திருமதி.ஆண்டாள், 48/2026, வட்டாட்சியர், வெம்பக்கோட்டை 2) திரு.விஜயகுமார், 55/2026, வட்ட துணை ஆய்வாளர், நில அளவை பிரிவு, வெம்பக்கோட்டை தாலுகா அலுவலகம், 3) திரு.நாகராஜ், 34/2026, வருவாய் ஆய்வாளர், வெம்பக்கோட்டை குறுவட்டம், 4) திருமதி.கலைச்செல்வி, 43/2026, கிராம நிர்வாக அலுவலர், கங்கரக்கோட்டை கிராமம் 5) திரு.மருதுபாண்டியன்,31/2026 கிராம உதவியாளர் கொங்கன்குளம் கிராமம், 6) திரு.சரவணக்குமார், 35/2026, த/பெ. பாலசுப்பிரமணியம், எதிர்கோட்டை, வெம்பக்கோட்டை தாலுகா, 7) திரு.பாலகிருஷ்ணன், 57/2026, த/பெ.வைரமுத்து, பாளையம் தெரு, சிவகாசி, விருதுநகர் மாவட்டம் மற்றும் 8) திரு.மணிகண்டன், 39/2026 த/பெ.தம்பிதுரை, கிழக்கு தெரு, கீழராஜகுலராமன், வெம்பக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

-தாமதமில்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் (இரா.பூமிநாதன், காவல் ஆய்வாளர்) 18.07.2026 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் இருந்தபோது, விருதுநகர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.லட்சம் அவர்கள் நிலையத்தில் ஆஜராகி 1) திருமதி.ஆண்டாள், வட்டாட்சியர், வெம்பக்கோட்டை 2) திரு.விஜயகுமார், வட்ட துணை ஆய்வாளர், நில அளவை மற்றும் பதிவேடுகள் பிரிவு, வெம்பக்கோட்டை தாலுகா அலுவலகம், 3) திரு.நாகராஜ், வருவாய் ஆய்வாளர், வெம்பக்கோட்டை குறுவட்டம், 4) திருமதி.கலைச்செல்வி, கிராம நிர்வாக அலுவலர், கங்கரக்கோட்டை கிராமம், 5) திரு.மருதுபாண்டியன், கிராம உதவியாளர் கொங்கங்குளம் கிராமம், 6) திரு.சரவணக்குமார், த/பெ. பாலசுப்பிரமணியம், எதிர்கோட்டை, வெம்பக்கோட்டை தாலுகா, 7) திரு.பாலகிருஷ்ணன், த/பெ.வைரமுத்து, பாளையம் தெரு, சிவகாசி, விருதுநகர் மாவட்டம் மற்றும் 8) திரு.மணிகண்டன், த/பெ.தம்பிதுரை, கிழக்கு தெரு, கீழராஜகுலராமன், வெம்பக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம் ஆகியோர்கள்மீது வழக்குபதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டி ஒரு புகார் மனுவையும், அத்துடன் திடீர் இணை ஆய்வு செயல்முறைகள் நாள் 17.07.2026, கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,40,500/-, கைப்பற்றப்பட்ட

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

18.7.26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in Charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் .....
Rank: நிலை .....No. எண் .....

விருதுநகர் மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.06/2026 பிரிவு 7, 8 of Prevention of Corruption Act 1988 as amended in 2018 and 106 BNSS-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

5 ஆவணங்கள் மற்றும் 1) திருமதி.ஆண்டாள், 2) திரு.நாகராஜ், 3) திருமதி.கலைச்செல்வி, 4) திரு.மருதுபாண்டியன், 5) திரு.சரவணக்குமார், 6) திரு.பாலகிருஷ்ணன், 7) திரு.மணிகண்டன் ஆகியோர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றையும் சேர்த்து புகார் மனு கொடுத்தார். அந்த புகார் மனு பின்வருமாறு. அனுப்புநர் திரு.S.லட்சம், (50/2026), த/பெ.சின்ன இருளாண்டி, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர் மாவட்டம் தனி வட்டாட்சியர், (குடிமை பொருள் வழங்கல்), விருதுநகர் தாலுகா, விருதுநகர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். அய்யா, பொருள் : விருதுநகர் மாவட்டம் - வருவாய்துறை - விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை தாலுகா அலுவலகம் - மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திடீர் இணை ஆய்வு - லஞ்ச பணம் கைப்பற்றியது - நடவடிக்கை எடுக்க வேண்டுவது - தொடர்பாக.நான் தற்போது விருதுநகர் மாவட்டம், விருதுநகர் தாலுகா, குடிமை பொருள் வழங்கல், தனி வட்டாட்சியராக 27.05.2026 அன்று முதல் பணிபுரிந்து வருகிறேன். விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்பேரில் கடந்த 03.06.2026ஆம் தேதி முதல் விருதுநகர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகவும் இருந்து வருகிறேன். நேற்று (17.07.2026) மாலை சுமார் 15.00 மணியளவில் விருதுநகர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள தனிவட்டாட்சியர் (குடிமைப்பொருள் வழங்கல்) அலுவலகத்தில் பணியிலிருந்தபோது, விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை தாலுகா அலுவலகத்தில் வட்டாட்சியராக பணிபுரிந்து வருபவர் வெம்பக்கோட்டை தாலுகாவிற்குட்பட்ட பயர் ஒர்க்ஸ் மற்றும் கல்குவாரி உரிமையாளர்களிடம், அவர்களுடைய உரிமம் தொடர்பான கோப்புகள்மீது தடையின்மை சான்று வழங்குவதற்கும், மேற்படி தாலுகா அலுவலகத்தில் சர்வே பிரிவில் பணிபுரியும் வட்ட துணை ஆய்வாளர் பட்டா மாறுதல் கோரிக்கைகளுக்காக வரும் பொதுமக்களிடம் அவர்களுடைய கோப்புகள் மீது நடவடிக்கை எடுத்து பரிந்துரை செய்வதற்கும் கையூட்டு பணம் பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோளின்பேரில், நேற்று (17.07.2026) மாலை 15.30 மணிக்கு விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து விபரத்தை கேட்டு தெரிந்துகொண்டு, விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.இரா.பூமிநாதன் மற்றும் அவர்களது குழுவினருடன் நேற்று (17.07.2026) மாலை சுமார் 15.40 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தை விட்டு புறப்பட்டு, வெம்பக்கோட்டை தாலுகா அலுவலகத்திற்கு மாலை சுமார் 17.00 மணியளவில் சென்று இரவு 23.45 மணி வரை திடீர் சோதனை இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி திடீர் சோதனை இணை ஆய்வின்போது, வட்டாட்சியர் அலுவலகத்தில் தரைதளத்தில் வரவேற்பு பகுதியில் இருந்த கொங்கன்குளம் கிராம உதவியாளர் திரு.மருதுபாண்டியன் என்பவர் சந்தேகத்திற்குரிய வகையில் வைத்திருந்த பணம் ரூ.6,000/-, வட்டாட்சியர் அறையிலிருந்த வெம்பக்கோட்டை குறுவட்ட வருவாய் ஆய்வாளர் திரு.நாகராஜ் என்பவர் சந்தேகத்திற்குரிய வகையில் வைத்திருந்த பணம் ரூ.6,000/-, கங்கரக்கோட்டை கிராம நிர்வாக அலுவலர் திருமதி.கலைச்செல்வி என்பவர் சந்தேகத்திற்குரிய வகையில் வைத்திருந்த பணம் ரூ.3,000/- ஆகியவை பொதுமக்கள் தங்களுடைய கோரிக்கைகளுக்காக அவரவர்களை சந்திக்க வந்தபோது அவர்களிடமிருந்து பெற்ற லஞ்சப்பணமாக இருக்கலாம் எனவும், அவர்களால் கணக்கில் காட்டப்பட முடியாத பணம் எனவும் கருதி கைப்பற்றப்பட்டது. அதே அலுவலகத்தில் வரவேற்பு பகுதியிலிருந்த தனிநபரான திரு.சரவணக்குமார், த/பெ.பாலசுப்பிரமணியம், கதவு எண்.2/79, மெயின்ரோடு, எதிர்கோட்டை, வெம்பக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம் என்பவர் சந்தேகத்திற்குரிய வகையில் வைத்திருந்த ரூ.90,000/- பணமானது வெம்பக்கோட்டை வட்டாட்சியராக பணிபுரியும் திருமதி.ஆண்டாள் என்பவருக்கு, அவரது உரிமையாளர் திரு.கிருஷ்ணசாமி தொடர்புடைய பட்டாசு கடைகளுக்கு உரிமம் கிடைக்க தடையின்மை சான்று வழங்கியதற்கு கொடுக்க கொண்டுவந்த லஞ்சப்பணம் என ஊர்ஜிதம் செய்து மேற்படி ரூ.90,000/- பணம் கைப்பற்றப்பட்டது. அதேபோல் அதே வரவேற்பு பகுதியிலிருந்த தனிநபரான திரு.பாலகிருஷ்ணன், த/பெ.வைரமுத்து, கதவு எண்.38A, பாளையம் தெரு, வசந்த் அன் கோ அருகில், சிவகாசி, விருதுநகர் மாவட்டம் என்பவர் சந்தேகத்திற்குரிய வகையில் வைத்திருந்த ரூ.14,000/- பணமானது வெம்பக்கோட்டை வட்டாட்சியராக பணிபுரியும் திருமதி.ஆண்டாள் என்பவருக்கு, அவருடைய பயர் ஒர்க்ஸ் தொழிலை சுமூகமாக நடத்துவதற்காக கொடுக்க கொண்டுவந்த லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதி கைப்பற்றப்பட்டது. அதேபோல் வெம்பக்கோட்டை தாலுகா அலுவலக முதல் தளத்திலிருந்த நில அளவை பிரிவு வட்ட துணை ஆய்வாளர் திரு.விஜயகுமார் அறைக்கு அருகே நின்று கொண்டிருந்த தனிநபரான திரு.மணிகண்டன், த/பெ.தம்பிதுரை, கதவு எண்.5/17, கிழக்கு தெரு, கீழராஜகுலராமன், வெம்பக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம் என்பவர் சந்தேகத்திற்குரிய வகையில் வைத்திருந்த ரூ.21,500/- பணமானது, அவருக்கு தெரிந்த நபர்களுக்கு பட்டா கிடைக்க ஏற்பாடு செய்வதற்காக, வெம்பக்கோட்டை தாலுகா அலுவலக நிலஅளவை பிரிவில் வட்ட துணை ஆய்வாளராக பணிபுரியும் திரு.விஜயகுமார் என்பவருக்கு கொடுக்க கொண்டுவந்த லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதி கைப்பற்றப்பட்டது. எனவே வெம்பக்கோட்டை வட்டாட்சியராக பணிபுரியும் திருமதி.ஆண்டாள் என்பவர்மீது, தனிநபரான திரு.சரவணகுமார் மற்றும் திரு.பாலகிருஷ்ணன் ஆகியோர் மூலம் லஞ்சப்பணம் பெற இருந்த குற்றத்திற்கும், மேற்படி தனிநபர்கள் திரு.சரவணகுமார், திரு.பாலகிருஷ்ணன் ஆகியோர்கள்மீது, அரசுப்பணியை செய்ததற்கு வட்டாட்சியர் திருமதி.ஆண்டாள் அவர்களுக்கு லஞ்சப்பணத்தை கொடுக்க கொண்டு வந்த குற்றத்திற்கும், வெம்பக்கோட்டை தாலுகா அலுவலக நிலஅளவை

பிரிவில் வட்ட துணை ஆய்வாளராக பணிபுரியும் திரு.விஜயகுமார் என்பவர்மீது, தனிநபரான திரு.மணிகண்டன் என்பவர் மூலம் லஞ்சப்பணம் பெற இருந்த குற்றத்திற்கும், மேற்படி தனிநபரான திரு.மணிகண்டன்மீது வட்ட துணை ஆய்வாளர் திரு.விஜயகுமார் அரசுப்பணியை செய்வதற்கு அவருக்கு தெரிந்த நபர்களிடமிருந்து லஞ்சப்பணத்தை பெற்று கொடுக்க இடைத்தரகராக செயல்பட்ட குற்றத்திற்கும், மேற்படி 1) திருமதி.ஆண்டாள், வட்டாட்சியர், வெம்பக்கோட்டை தாலுகா 2) திரு.விஜயகுமார், வட்ட துணை ஆய்வாளர், நில அளவை பிரிவு, வெம்பக்கோட்டை தாலுகா அலுவலகம், வெம்பக்கோட்டை, 3) திரு.நாகராஜ், குறுவட்ட வருவாய் ஆய்வாளர், வெம்பக்கோட்டை, 4) திருமதி.கலைச்செல்வி, கிராம நிர்வாக அலுவலர், கங்கரக்கோட்டை கிராமம், வெம்பக்கோட்டை தாலுகா, 5) திரு.மருதுபாண்டியன், கிராம உதவியாளர் கொங்கன்குளம், வெம்பக்கோட்டை தாலுகா, 6) திரு.சரவணக்குமார், த/பெ.பாலசுப்பிரமணியம், கதவு எண்.2/79, மெயின்ரோடு, எதிர்கோட்டை, வெம்பக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம், 7) திரு.பாலகிருஷ்ணன், த/பெ.வைரமுத்து, கதவு எண்.38A, பாளையம் தெரு, வசந்த் அன் கோ அருகில், சிவகாசி, விருதுநகர் மாவட்டம் மற்றும் 8) திரு.மணிகண்டன், த/பெ.தம்பிதுரை, கதவு எண்.5/17, கிழக்கு தெரு, கீழராஜகுலராமன், வெம்பக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம் ஆகியோர்கள்மீது வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் திடீர் இணை ஆய்வு செயல்முறைகள் நாள் 17.07.2026, கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.1,40,500/-, கங்கர்செவல் கிராமத்திற்குட்பட்ட ஸ்வர்ணிகா கிராக்கர்ஸ், அஜய்கிருஷ்ணா கிராக்கர்ஸ், நிகில் நேத்திரன் கிராக்கர்ஸ் மற்றும் கிருஷ்ணா கிராக்கர்ஸ் ஆகிய 4 பட்டாசு கடைகளின் உரிமம் தொடர்புடைய கோப்புகள், மேற்படி கோப்புகள் தொடர்புடைய பதிவுகள் உள்ள தன்பதிவேடு-2026 சான்றொப்பமிட்ட நகல் மற்றும் 1) திருமதி.ஆண்டாள், 2) திரு.நாகராஜன், 3) திருமதி.கலைச்செல்வி, 4) திரு.மருதுபாண்டியன், 5) திரு.சரவணகுமார், 6) பாலகிருஷ்ணன் மற்றும் 7) திரு.மணிகண்டன் ஆகியோர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை சமர்ப்பிக்கிறேன். (sd) சி.லட்சம் (18.7.26) (சி.லட்சம்), மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர் மாவட்டம். தனி வட்டாட்சியர் (குடிமை பொருள் வழங்கல்), விருதுநகர் தாலுகா, விருதுநகர் மாவட்டம். Sir, Received the complaint on 18.07.2026 at 10.00 hrs, I have registered a case in Viruthunagar V&AC Cr.No.06/2026 u/s 7, 8 of P.C Act 1988 as amended in 2018 and 106 BNSS on 18.07.2026 at 11.00 hrs (Sd) R.Boominathan 18/07/26 (R.Boominathan), Inspector of Police, V&AC, VNR.

The original FIR along with original complaint, Joint Surprise Check Proceedings are statements submitted to the court of the Principal District and Session Judge cum Special Judge for P.C. Act cases, Virudhunagar at Srivilliputhur and copies submitted to the concerned officers.